# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 303 | 4 Pages | 6.4.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 303 | 4 பக்கங்கள் | 6.4.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# சந்திரபாபு நாயுடுவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூன் . 6

நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஆந்திரா, ஒடிசா சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. ஆந்திராவில் உள்ள மொத்த சட்டசபை தொகுதிகளின் எண்ணிக்கை 175 ஆகும். இதில் 88 இடங்களை வெல்லும் கட்சி ஆட்சியை பிடிக்கும்.

இந்த சூழலில் ஆந்திர சட்டசபை தொகுதிகளில் 175ல் 158 இடங்களில் தெலுங்குதேசம் கட்சி முன்னிலை வகிக்கிறது. மேலும் கூட்டணி இல்லாமல் தனித்து 131 தொகுதிகளில் தெலுங்குதேசம் கட்சி முன்னிலை வகிக்கிறது. தேவையான இடங்களுக்கு மேல் தெலுங்குதேசம் முன்னிலையில் இருப்பதால்அக்கட்சியின்தலைவர் சந்திரபாபு நாயுடு முதல்மந்திரி ஆவது உறுதியாகி உள்ளது.

இந்நிலையில் ஆந்திராவில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அமோக வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சி (டிடிபி) தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், 'ஆந்திர சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சி (டிடிபி) தலைவர் சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு வாழ்த்துகள்.

தங்களது தலைமை ஆந்திரத்துக்கு வளத்தையும் வளர்ச்சியையும் தந்து, அம்மாநில மக்களின் கனவுகளையும் நம்பிக்கையையும் நிறைவேற்றட்டும்', இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# வரும் காலங்களில் உங்களின் அன்பையும் அங்கீகாரத்தையும் பெற எங்கள் உழைப்பை இரட்டிப்பாக்குவோம்: அண்ணாமலை



சென்னை, ஜூன். 6

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில், பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை ஆதரித்து, தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குப் பெருமளவில் வாக்களித்த தமிழக மக்கள் அனைவருக்கும், இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்முறை நமது மக்களின் பிரிதிநிதிகளாக பாராளுமன்றம் செல்லமுடியவில்லை என்ற வருத்தம் இருந்தாலும், வரும் காலங்களில் உங்களின் அன்பையும் அங்கீகாரத்தையும் பெற எங்கள் உழைப்பை இரட்டிப்பாக்குவோம்.

நமது பாரதப் பிரதமர், கடந்த பத்து ஆண்டுகளாக, நாட்டின் வளங்களையோ, சாமானிய மக்கள் வரிப்பணத்தையோ சுரண்டாமல், ஒரு மத்திய மந்திரி மீது கூட ஊழல் குற்றச்சாட்டு இல்லாத நல்லாட்சியை வழங்கியிருக்கிறார் என்பதுநமக்கெல்லாம்பெருமை. மேலும், நாட்டின் உட்கட்டமைப்பு, விவசாயம், சாமானிய மக்கள், பெண்கள் மற்றும் இளைஞர் மேம்பாடு சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி, இடைத் தரகர்கள் இல்லாமல், அனைத்துப் பலன்களும் நேரடியாக மக்களைச் சென்றடைய வழிவகை செய்திருக்கிறார்.

நமது பாரதப் பிரதமரின் நலத்திட்டங்கள், தமிழகத்தின் அனைத்துத் தரப்பு பொதுமக்களையும் சென்றடைந்திருக்கிறது என்பதை தற்போதைய தேர்தல் முடிவுகளில், தமிழகம் முழுவதும் பரவலாகக் கிடைத்துள்ள வாக்குகள் மூலம் அறிய முடிகிறது. மத்தியில்மீண்டும்பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையவிருப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். நமது தேசிய ஜனநாயகக் கூட்டணி, தமிழக அரசியலில் தவிர்க்கவியலாத சக்தியாகத் தொடர, தமிழக மக்கள் பெரும் ஆதரவளித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. நமதுபிரதமரின்அடுத்த ஐந்து ஆண்டு கால ஆட்சி, நமது குழந்தைகளின் எதிர்காலத்தை முன்னிறுத்தியதாக அமையும்.

எங்கள் மீது நம்பிக்கை வைத்து, வாக்களித்துள்ள அனைவருக்கும், மீண்டும் ஒரு முறை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் நலனுக்கான குரலாய், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குரலும், தமிழகபா.ஜ.கவின் குரலும் தொடர்ந்து ஒலிக்கும். தேர்தல் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தன்னலமின்றி கடுமையாக உழைத்ததமிழகபா.ஜ.க. சொந்தங்கள், தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவருக்கும் தலைவணங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வரும் காலங்களில், நமது மக்கள் நலனுக்கான நமது உழைப்பை இரட்டிப்பாக்குவோம். நம் உழைப்பிற்கு, நமது மக்கள் நிச்சயம் அங்கீகாரம் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# எங்கள் கூட்டணிக்கு வாக்களித்த தமிழக மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்: கமல்ஹாசன் பேச்சு



சென்னை, ஜூன் 6

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தி.மு.க அரசு செய்துகாட்டிய பணிகளால் கிடைத்த வெற்றியை அதன்தலைமையிலானகூட்டணி தமிழ்நாட்டில் அறுவடை செய்திருக்கிறது. மக்களுக்காகச்சிந்தித்து, மக்கள்பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து நடத்தப்பெறும் நல்லாட்சிக்கு ஆதரவளிக்க மக்களும் தயாராக இருப்பதையே இந்த மாபெரும் வெற்றி காட்டுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 2019 மக்களவைத் தேர்தலில் தொடங்கி, தான் எதிர்கொண்ட அனைத்துத் தேர்தல்களிலுமே அருமை நண்பர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெற்றியைக் குவித்திருக்கிறார். அவருக்கு என் மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

இந்தியாவைக் காக்கும் போரில், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து களம் கண்ட கூட்டணிக் கட்சியினருக்கும், மக்கள் நீதி மய்யத்தின் தொண்டர்களுக்கும். எங்கள் கூட்டணிக்கு வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

சிந்தாமல் சிதறாமல் சந்தேகம் இல்லாமல் நாம் பெற்றிருக்கும் இந்த வெற்றி இந்தியாவிற்கு வழியும். ஒளியும் காட்டக் கூடியவை. இந்தியா வாழ்க. தமிழ்நாடு ஓங்குக. தமிழ் வெல்க. இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 'பா.ஜனதாவால் தமிழக மக்களை ஒருபோதும் ஆள முடியாது' ராகுல்காந்தியின் பழைய பேச்சு 'வைரல்'



சென்னை, ஜூன். 6

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா கூட்டணி தமிழகத்தில் ஒன்று அல்லது 2 இடங்களை கைப்பற்றும் என்று கருத்து கணிப்புகள் வெளியாகின. இந்த நிலையில், நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதில், தமிழகம் மற்றும் புதுச்சேரி என 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியை தொடர்ந்து, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் சமூக வலைதளங்களில் வெற்றி கொண்டாட்டங்களை பதிவு செய்தார்கள். அப்போது, கடந்த 2022ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தியின் உரை வைரலானது.

'உங்கள் (பா.ஜனதா) வாழ்நாள் முழுவதும் ஒருபோதும் தமிழக மக்களை உங்களால் ஆள முடியாது, அது உங்களால் முடியவே முடியாது' என்ற ராகுல்காந்தியின் உரை வைரலானது. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தன்னுடைய அதிகாரப்பூர்வ 'எக்ஸ்' சமூக வலைதள பக்கத்தில் அந்த வீடியோவை பதிவு செய்துள்ளது.

## பா.ஜனதா ஆட்சி அமைப்பதை தடுக்க சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமாரை எதிர்பார்க்கும் ஆம் ஆத்மி



புதுடெல்லி, ஜூன். 6

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதாவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. கூட்டணியில் உள்ள பெரிய கட்சிகளான தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதாதளம் ஆகிய கட்சிகளை அரவணைத்துத்தான் ஆட்சி அமைக்க வேண்டிய நிலை உள்ளது.

இதை சுட்டிக்காட்டி, ஆம் ஆத்மி கட்சி மூத்த தலைவரும், டெல்லி சுகாதாரத்துறை மந்திரியுமான சவுரவ் பரத்வாஜ், இரு கட்சிகளும் பா. ஜனதா ஆட்சி அமைப்பதை தடுக்க வேண்டும் என்று மறைமுக அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் தனது 'எக்ஸ்' வலைத்தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

சுவையான உண்மைகள். கடந்த 2019ம் ஆண்டு, தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடு அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களையும் மோடிக்கு எதிராக ஒன்று திரட்டினார். அதுபோல், 2024ம் ஆண்டு, மோடிக்குஎதிராகஅனைத்துஎதிர்க்கட்சிதலைவர்களையும்நிதிஷ்குமார் ஒன்று திரட்டினார். தற்போது அவர்கள் கையில்தான் எல்லாம் இருக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தேர்தலில் போட்டியிட்ட 'அம்பாசமுத்திரம் அம்பானி' பட நடிகை அதிர்ச்சி தோல்வி



மும்பை, ஜூன். 6

தமிழ் சினிமாவில் அம்பாசமுத்திரம் அம்பானி, அரசாங்கம் படங்களில் நடித்தவர் நவ்நீத் ரானா. இவர் கடந்த 2019ம்ஆண்டுநாடாளுமன்றதேர்தலில் மராட்டிய மாநிலம் அமராவதியில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். அப்போது அவருக்கு பிளவுபடாத தேசியவாத காங்கிரஸ் ஆதரவு அளித்து இருந்தது.

எனினும் தேர்தலுக்கு பிறகு அவர் போலி சாதி சான்றிதழ் விவகாரத்தில் சிக்கினார். அதன்பிறகு அவர் பா.ஜனதா ஆதரவு எம்.பி. ஆனார்.

இந்தநிலையில் நாடாளுமன்ற தேர்தலில் அவர் பா.ஜனதா கட்சி வேட்பாளராக அமராவதியில் போட்டியிட்டார். அவருக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கியதற்கு கூட்டணி கட்சியான சிவசேனாவை சேர்ந்த உள்ளூர் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்து இருந்தனர்.

தேர்தலில் நவ்நீத் ரானாவுக்கு எதிராக காங்கிரஸ் சார்பில் பஸ்வந்த் வான்கடே போட்டியிட்டார். இதில் அவரிடம் நவ்நீத் ரானா 19 ஆயிரத்து 731 ஓட்டுகள் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். காங்கிரஸ் வேட்பாளர் பஸ்வந்த் வான்கடே 5 லட்சத்து 26 ஆயிரத்து 271 வாக்கு பெற்றார். நவ்நீத் ரானா 5 லட்சத்து 6 ஆயிரத்து 540 வாக்குகளை பெற்று இருந்தார்.

# மனைவியை கழுத்தை அறுத்து கொன்ற ராணுவ வீரர்.... குடும்பத் தகராறில் விபரீதம்



திருவள்ளூர், ஜூன் 6

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு அடுத்த ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம் செல்லாத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் விஜயன் (வயது 38). ராணுவ வீரர். இவர் தனது அக்காள் மகள் மோகனாவை (28) திருமணம் செய்தார். இவர்களுக்கு ஆதி (10), அனிருத் (10) என்ற இரட்டை குழந்தைகள் உள்ளனர்.

விஜயன் குடும்பமும், இவரது அண்ணன் பாலாமணி என்பவரது குடும்பமும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட குடும்ப தகராறில் பாலாமணி தனது குடும்பத்துடன் தனி குடித்தனம் சென்றார். இந்த சம்பவம் அசாம் மாநிலத்தில் பணியாற்றி வந்த ராணுவ வீரர் விஜயனுக்கு தெரிய வந்தது. இதனால் விஜயனுக்கும் மோகனாவுக்கு தகராறு ஏற்பட்டது. விஜயன் கடந்த சில தினங்களுக்கு முன்பு வீட்டுக்கு வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு குடித்துவிட்டு வீட்டிற்கு வந்த விஜயனுக்கும் அவரது மனைவி மோகனாவுக்கும், அண்ணனைவீட்டை விட்டு வெளியே அனுப்பிய விவகாரம் தொடர்பாக மீண்டும் தகராறு ஏற்பட்டது. இருவருக்கும் வாக்குவாதம் முற்றியநிலையில் ஆத்திரம் அடைந்த விஜயன் கத்தியால் மனைவி மோகனா கழுத்தை அறுத்து படுகொலை செய்தார். பின்னர் விஜயன் போதையில் அங்கேயே படுத்து தூங்கி விட்டார்.

மோகனா கொலை செய்யப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்ட அக்கம்பக்கத்தினர் அதிர்ச்சி அடைந்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த ஆர்.கே. பேட்டை போலீசார் மோகனாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருத்தணி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மனைவியை கொலை செய்த ராணுவ வீரர் விஜயனை போலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக எழுச்சித்தமிழர் திருமாவளவன் சிதம்பரத்தில் வெற்றி பெற்றார் விழுப்புரத்தில் பொது செயலாளர் ரவிக்குமார் வெற்றி பெற்றார் வெற்றியை கொண்டாடும் வகையில் செஞ்சி நான்கு முனை சந்திப்பில் கூட்டுரொட்டி பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் ஆ ஏ தனஞ்செழியன் தலைமை தாங்கினார் வெற்றி கொண்டாட்டத்தில் மாநில துணை செயலாளர் துரைசங்கர் மாவட்ட அமைப்பாளர் செஞ்சி அரசு செஞ்சி ஒன்றிய பொருளாளர் பார்வேந்தன் மேல்மலையனூர் ஒன்றிய துணை செயலாளர் சுந்தரமூர்த்தி இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்டத் துணை அமைப்பாளர் செஞ்சி அம்பேத் சிவகுமார் செஞ்சி ஒன்றியம் வெற்றி வளவன் காரை நாகசாமி அரசு போக்குவரத்து பணிமனை செயலாளர் ஐயப்பன் அன்னமங்கலம் முனுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்

# செல்போன் வாங்கித் தராததால் விரக்தி.. வீட்டை விட்டு வெளியேறிய பள்ளி மாணவிக்கு காத்திருந்த அதிர்ச்சி

சென்னை, ஜூன் 6

சென்னை ராயபுரம் பகுதியை சேர்ந்த கணவன், மனைவி இருவரும் கட்டிட வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு 15 வயதில் மகள் இருக்கிறாள். அவர், தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 11ம் வகுப்பு செல்கிறார். பள்ளிகள் 10ந்தேதிதான் திறக்கப்படுவதால் வீட்டில் இருந்தார். கடந்த மாதம் 30ந் தேதி மாணவி தனது பெற்றோரிடம் செல்போன் வாங்கி தருமாறு கேட்டார்.

அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

இதனால் விரக்தி அடைந்த மாணவி, பெற்றோர் வேலைக்கு சென்றிருந்த நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறினார். வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பெற்றோர், மகள் மாயமாகி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். எங்கு தேடியும் மகளை காணாததால் ராயபுரம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான மாணவியை தேடி வந்தனர்.

இந்தநிலையில் கடந்த 2ந் தேதி மாணவி வீட்டுக்கு திரும்பி வந்தார். இதுபற்றி மாணவியிடம் போலீசார் விசாரணை செய்தனர்.

அப்போது தனது சொந்த ஊரான விழுப்புரம் மாவட்டத்துக்கு சென்றதும், அதே மாவட்டம் ஒட்டம்பட்டியைச் சேர்ந்த வரதராஜ் என்பவரை 2 ஆண்டுகளாக காதலித்து வந்ததும்,

அங்கு சென்றபோது வரதராஜ், மாணவியை பாலியல் பலாத்காரம் செய்ததும் தெரிந்தது. இதையடுத்து போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து வாலிபர் வரதராஜை தேடி வருகிறார்கள்.



அரசு மதுபான கடைகளு விடுமுறை தினமான இன்று திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா செம்பட்டி அருகேபுது கோடாங்கி பட்டியில் இயங்கி வரும் மதுபான பாரில் கள்ளத்தனமாக போலியாக மது விற்கப்படுவதாக செம்பட்டி காவல் நிலையத்துக்கு தகவல் கிடைத்ததன் பேரில் எஸ் ஐ ராஜேந்திரன் மற்றும் எஸ் எஸ் ஐ செல்வராஜ் தலைமை காவலர்கள் சீமான் மற்றும் மருதுபாண்டிய ண் ஆகியோர் அடங்கிய குழு மதுவிற்க்கப்படும் இடத்திற்கு நேரடியாக சென்று மது விற்பவர்களை கையும் களவுமாக சுமார் 40க்கு மேலான மது பாட்டில்களோடு பிடித்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்

# 'தமிழகத்தில் 6ந்தேதி வரை தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்' : சத்யபிரதா சாகு தகவல்

சென்னை, ஜூன் 6

நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலவரப்படி ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையுடன் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 294 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. அதே சமயம் 'இந்தியா' கூட்டணி 231 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றியை உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர், இன்று காலையில் இருந்து வாக்கு எண்ணிக்கை சுமூகமாக நடைபெற்று வருவதாகவும்,

எந்த விதமான புகாரும் இதுவரை வரவில்லை என்றும் தெரிவித்தார்.



மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் வரும் 6ந்தேதி வரை அமலில் இருக்கும் என்றும், அதன் பிறகு விலக்கிக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

நெல்லையில் 30 சதவீதம் தபால் வாக்குகள் செல்லாது என்று அறிவித்தது தொடர்பான புகார் குறித்து தேர்தல் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று குறிப்பிட்ட அவர்,


வாக்கு எண்ணும் மையத்தில் இருந்து நேரடியாக தகவல் வெளியிடப்படும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் அனைத்து தகவல்களும் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதா மறைவுக்கு பிறகு தொடர்ந்து தோல்வியை சந்தித்து வரும் அ.தி.மு.க.

சென்னை, ஜூன் 6

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருகிறது. இந்த முறை 32 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு இடம் கூட கிடைக்காததால் தொண்டர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த 2014ம் ஆண்டு தேர்தல் தான் மறைந்த முதல்அமைச்சர் ஜெயலலிதா சந்தித்த கடைசி நாடாளுமன்ற தேர்தல் ஆகும். அந்த தேர்தலில் 'இந்த லேடியா? அல்லது மோடியா?' என்ற அவரது பிரசார முழக்கம் தமிழக மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



அந்த தேர்தலில் அ.தி.மு.க. தனித்து போட்டியிட்டு 37 தொகுதிகளில் அபார வெற்றி பெற்றது. அதோடு 44 சதவீத வாக்குகள் பெற்று சாதனை படைத்தது.

அதன்பின் ஜெயலலிதா மறைவிற்கு பிறகு அ.தி.மு.க. சந்தித்த 2019 மற்றும் தற்போதைய 2024ம் ஆகிய 2 நாடாளுமன்ற தேர்தல்களிலும் தோல்வியை சந்தித்துள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க பாட்டாளி மக்கள் கட்சி, தே.மு.தி.க., பா.ஜனதா, புதிய நீதி கட்சி, புதிய தமிழகம், தமிழ் மாநில காங்கிரஸ் என பல்வேறு கட்சிகளை இணைத்து தேர்தலை சந்தித்தது. அதில் அ.தி.மு.க. 20 இடங்களில் போட்டியிட்டு தேனி தொகுதியில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. அந்த தேர்தலில் அ.தி.மு.க.விற்கு 19.39 சதவீத வாக்குகள் தான் கிடைத்தது.

இதுதான் அ.தி.மு.க. வரலாற்றில் அந்த கட்சிக்கு கிடைத்த குறைந்த பட்ச வாக்கு சதவீதம் ஆகும்.

அதே போல் இந்த தேர்தலில் அ.தி.முக., தே.மு.தி.க. மற்றும் புதிய தமிழகம் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை சந்தித்தது. மொத்தம் 32 தொகுதிகளில் போட்டியிட்ட அந்த கட்சியால் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை.

# நாம் தமிழர் கட்சிக்கு 5 தொகுதிகளில் 3ம் இடம்

சென்னை, ஜூன் 6

நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க., மற்று அ.தி.மு.க. கட்சிகளுக்கு அடுத்தபடியாக பா.ஜ.க. மற்றும் நாம் தமிழக கட்சிகள் முக்கியமான கட்சிகளாக உள்ளன.

இதில் நாம் தமிழர் கட்சிக்கு பல தொகுதிகளில் அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

நாடாளுமன்ற தேர்தலில் 39 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி திருச்சி, கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாகப்பட்டினம் ஆகிய 4 தொகுதிகளில் பா.ஜனதா மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களையும், கன்னியாகுமரியில் அ.தி.மு.க. வேட்பாள ரையும் பின்னுக்கு தள்ளி 3ம் இடத்தை பிடித்து ள்ளது. மீதமுள்ள அனைத்து தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி 4ம் இடத்தையே பிடித்தது.

கடந்த தேர்தல்களில் கரும்பு விவசாயி சின்னத்தில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி இம்முறை மைக் சின்னத்தில் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மின்சார ரெயில் சேவை ஒரு மணி நேரம் பாதிப்பு பயணிகள் கடும் அவதி



சென்னை, ஜூன் 6

சென்னையில் வசிக்கும் பொதுமக்களின் முக்கிய போக்குவரத்து சேவையாக மின்சார ரெயில் சேவை இருந்து வருகிறது. கடற்கரையில் இருந்து இயக்கப்படும் ரெயில்களில் அதிகப்படியான பயணிகள் பயணித்து வருகின்றனர். அன்றாட பணி மற்றும் பல்வேறு பணிகளுக்காக சென்னை வருபவர்களுக்கு குறைந்த செலவில், விரைவாக செல்ல இந்த வசதி பெரிதும் பயன்படுகிறது.

கடற்கரை தாம்பரம் மற்றும் தாம்பரம்கடற்கரை நோக்கி மின்சார ரெயில்கள் வழக்கம் போல இயக்கப்பட்டன. இந்தநிலையில் மாலை 5.30 மணியளவில் பரங்கிமலை ரெயில் நிலையத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கி செல்லும் மின்சார ரெயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

தனால் தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கி வந்து கொண்டிருந்த மின்சார ரெயில்கள் பழவந்தாங்கல், மீனம்பாக்கம், திரிசூலம், பல்லாவரம் ஆகிய ரெயில் நிலையங்களுக்கு இடையே ஆங்காங்கே நடுவழியில் நிறுத்தப்பட்டன. ரெயில்கள் எந்த அறிவிப்பும் இல்லாமல் வெகு நேரமாக நிறுத்தப்பட்டிருந்ததால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

எழும்பூர், நுங்கம்பாக்கம், கிண்டி போன்ற ரெயில் நிலையங்களிலும் ரெயில் வெகுநேரம் வராததால் பயணிகள் கூட்டம் அலைமோதியது. சில பயணிகள் மெட்ரோ ரெயில் மூலம் பயணித்தனர்.

தாம்பரம் கடற்கரை இடையே இந்த பாதிப்பு ஏற்பட்டதால் கடற்கரையில் இருந்து தாம்பரம் செல்லும் ரெயில்களும் மெதுவாக இயக்கப்பட்டன. இதனால் மின்சார ரெயில்கள் ஆமை போல ஊர்ந்து ஒவ்வொரு ரெயில் நிலையமாக கடந்து சென்றது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கு பிறகு மின்தடை பாதிப்பு சரி செய்யப்பட்டு ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்ட ரெயில்கள் ஒன்றன் பின் ஒன்றாக கடற்கரை நோக்கி புறப்பட்டு சென்றது. பின்னர் கடற்கரை தாம்பரம் வழித்தடத்திலும் மின்சார ரெயில் சேவை சீரானது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரி ஒருவர் கூறும்போது, "நேற்று மாலை சென்னையில் அதிக காற்றுடன் மழை பெய்ததால் பரங்கிமலை ரெயில் நிலையத்தில் உள்ள உயர்மின் அழுத்த கம்பிகளில் பிளாஸ்டிக் பைகள் சிக்கியதால் இந்த மின்தடை ஏற்பட்டுள்ளது. பயணிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் ரெயில்களை இயக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்றார்.

# ஆன்லைன் சூதாட்டத்தால் பணம் இழப்பு.. கோவையில் சி.ஐ.எஸ்.எப். வீரர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

கோவை, ஜூன். 6

கோவை பீளமேட்டில் சர்வதேச விமான நிலையம் உள்ளது. இங்கிருந்து இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் கோவை விமான நிலையம் எப்போதும் பரபரப்பாக காணப்படும்.

இங்கு மத்திய தொழில் பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்.) வீரரான ஆந்திர மாநிலத்தை சேர்ந்த சகர்தர் (வயது 34) என்பவர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்தார். நேற்று காலை இவர் கோவை விமான நிலையத்தில் இருந்து பயணிகள் வெளியே வரும் வழியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது அவரது கையில் பாதுகாப்புக்காக ஏ.கே. 47 துப்பாக்கியை வைத்திருந்தார்.

திடீரென அவர் அங்கிருந்த கழிவறைக்கு சென்றார். சிறிது நேரத்தில் கழிவறையில் இருந்து துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. இதனால் விமான நிலையத்தில் இருந்த பயணிகள் அலறியடித்தப்படி ஓட்டம் பிடித்தனர்.

சத்தம் கேட்டு அங்கு வந்த மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் கழிவறையின் கதவை திறந்து பார்த்தனர். அப்போது சகர்தர் துப்பாக்கியால் தனக்கு



தானே தலையில் சுட்டப்படி ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். இதனைக்கண்ட மத்திய பாதுகாப்பு படையினர் அவரை மீட்டு, சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவத்தால் கோவை விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

முதல் கட்ட விசாரணையில் சகர்தர் ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த காரணத்தால், நீண்ட நாட்களாக மனம் உடைந்து காணப்பட்டுள்ளார். இதனால் அவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக பீளமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் மக்களின் எண்ணங்களை முழுமையாக பிரதிபலிக்கும் முடிவு அல்ல: எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜூன் 6

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நெடிய அரசியல் பயணத்தில் வெயிலும், நிழலும் கொள்கைப் போராளிகளுக்கு சமமே! வீழ்த்த முடியாத மக்கள் பேரியக்கம் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்பது மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற மக்களவைப் பொதுத்தேர்தல்முடிவுகள் நாம் எதிர்பார்த்தது போலவே அதிகார பலமும், பண பலமும், பொய்ப் பிரச்சார பலமும், அறத்திற்கு அப்பாற்பட்ட சூழ்ச்சி பலமும் மிகுந்தவர்களுக்கு சாதகமாக வந்திருக்கின்றன. தற்போது வெளிவந்துள்ள நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் முடிவுகள், மக்களின் ஏகோபித்த எண்ணங்களை முழுமையாக பிரதிபலிக்கும் முடிவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

'பொன்மனச் செம்மல்' எம்.ஜி.ஆர்., "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று தவவாழ்வு வாழ்ந்த ஜெயலலிதா ஆகியோர் உருவாக்கி, கட்டிக் காத்து, வழிநடத்திய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சூழ்ச்சியால் வீழ்த்தி, சுயநலத்திற்காக



கபளீகரம் செய்ய திரைமறைவிலும், வெளிப்படையாகவும் நடைபெற்ற சூழ்ச்சியையும், சூதுகளையும் மிகவும் நுணுக்கமாகப் புரிந்துகொண்ட கழகத் தொண்டர்களின் அன்புக் கட்டளைகளுக்கு ஏற்பவே, "கொள்கைக்காக வாழ்வோம்; எது வந்தாலும் ஏற்போம்" என்று இந்தத் தேர்தலில் களம் இறங்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது' காட்டிலே ஓடும் முயலைக் குறி தவறாது கொன்ற அம்பைவிட, யானையின் மேல் குறி வைத்து தவறிப்போன வேலைத் தாங்குதல் வீரனுக்கு அழகாகும் என்ற திருவள்ளுவரின் பொது வாழ்வு இலக்கணத்திற்கு ஏற்ப, இந்தத் தேர்தலை கனநேர சிறிய வெற்றிக்காக அல்லாமல், ஏற்றுக் கொண்ட கொள்கையின் வெற்றிக்காக துணிவுடன் எதிர்கொண்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். தனித்து நின்றோம்; கொள்கை வீரர்களாக தலை நிமிர்ந்து நிற்கிறோம்.

'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' அதிகார பலம் படைத்தவர்களின் நிழலில், மக்கள் நலனையும், மாநிலத்தின் பெருமையையும் இழக்காமல், பதவி என்பது எங்களைப் பொறுத்தவரை மக்களுக்குப் பணியாற்ற ஒரு பாதையே தவிர, எல்லா நேரத்திலும் கொள்கைச் சிங்கங்களாகவே அரசியல் களமாடுவோம் என்பதை இந்தத் தேர்தல் உலகுக்கு உரக்கச் சொல்லி இருக்கிறது.

"இனி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வளவுதான்" என்று 1980, 2004 மற்றும் 2019 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் போதும்; 1996 சட்டமன்றத் தேர்தல் முடிவின்போதும்; ஏன், 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவும், நம் கதை முடிந்ததாக ஆரூடம் கூறி ஆனந்தப்பட்டவர்களின் அகங்காரத்தை முறியடித்த பெருமை கழகத்திற்கு உண்டு. 2021, சட்டமன்றப் பொதுத் தேர்தலில் கழகக் கூட்டணி 75 இடங்களைப் பெற்று நாம் யார் என்பதை உலகுக்குக் காட்டினோம்.

இந்தத் தேர்தல் முடிவுகள் நம்மை சோர்வடையச் செய்யாது. 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான பாடமும், படிப்பினையும் நமக்குக் கிடைத்திருக்கிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெறுவோம். எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், இதுநாள் வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளை மனதில் கொண்டு நம் கூட்டணிக்கு வாக்களித்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலின்போது அல்லும், பகலும் அயராது உழைத்தகழகநிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்களின் திருப்பாதம் பணிகிறேன். 'உங்கள் உழைப்புக்கும், தியாகத்திற்கும் என்ன கைமாறு செய்யப் போகிறேன்' என்று கண் கலங்குகிறேன். இன்னும் தீவிரமாகவும், தீர்க்கமாகவும் பணியாற்றி, நீங்கள் தலைநிமிர்ந்து வெற்றி நடைபோட உறுதி ஏற்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றியை பாசத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு அளித்த கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள், தோழமை இயக்கத்தினர் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். "எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே உன்னை இடரவைத்து, தள்ளப் பார்க்கும் குழியிலே அத்தனையும் தாண்டி காலை முன் வையடா நீ அஞ்சாமல் கடமையிலே கண் வையடா! சத்தியமே லட்சியமாய் கொள்ளடா" என்ற புரட்சித் தலைவரின் பாடல் நமக்கு என்றைக்கும் வழிகாட்டும். நன்றி, வணக்கம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி: 3.92 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் கனிமொழி வெற்றி

தூத்துக்குடி, ஜூன் 6

தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகுதி என 40 தொகுதிகளில் கடந்த ஏப்ரல் 19ந் தேதி ஒரே கட்டமாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

இதில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகள் கூட்டணியிட்டும், நாம் தமிழர் கட்சி தனித்தும் களம் கண்டது.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலவரப்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி முன்னிலை வகிக்கிறது.



இந் நிலையில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி: 3.92 லட்சம் வாக்குகள்வித்தியாசத்தில் கனிமொழி வெற்றிபெற்றுள்ளார்.

தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி மொத்த வாக்கு எண்ணிக்கை:

கனிமொழி (திமுக) 5,40,729 சிவசாமி வேலுமணி (அதிமுக) 1,47,991

விஜயசீலன் (பாஜக கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ்) 1,22,380

டாக்டர் ரொவினா ரூத் ஜேன் (நாம் தமிழர்) 1,20,300

# நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள்: 10 ஆண்டு கால மோடி ஆட்சிக்கு பலத்த அடி: கே.பாலகிருஷ்ணன்

சென்னை, ஜூன் 6

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: 2024 நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகி கொண்டிருக்கின்றன. பா.ஜ.க.வின் அதிகார பலம், தில்லுமுல்லுகள், பண பலம், வெறுப்பு பேச்சுகள் இவைகளை முறியடித்து பா.ஜ.க.வின் தனித்த ஆட்சிக்கு வாக்காளர்கள் முடிவு கட்டியுள்ளனர். பா.ஜ.க.வின் கோட்டையாகக் கருதப்பட்ட உத்தரப் பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.க. படுதோல்வியடைந்துள்ளது. திட்டமிட்டு திணிக்கப்பட்ட தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை வாக்காளர்கள் தவிடுபொடியாக்கியுள்ளார்கள். மோடியின் (சார் சோ பார்) 400+ என்ற முழக்கம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுவையில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. தமிழகத்தில் மதவெறி சக்திகளின் பண பலம், அதிகார பலம் தேர்தல் வரம்பு மீறல்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்கி இந்தியா அணி வரலாறு காணாத சாதனை படைத்துள்ளது. நரேந்திர மோடி எத்தனை முறை படையெடுத்தாலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்ற முடியாது என்பதை தமிழக வாக்காளப் பெருமக்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார்கள். இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த தமிழக வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. இக்கூட்டணியின் வெற்றிக்காக மதசார்பற்ற சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றி, பரப்புரையும் மேற்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழக முதல்அமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கூட்டணி கட்சி தலைவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. இத்தேர்தலில் மதுரை, திண்டுக்கல் தொகுதிகளில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களை அமோகமாக வெற்றிபெறச் செய்திட்ட வாக்காளப் பெருமக்களுக்கும், இவர்களது வெற்றிக்கு அயராது உழைத்திட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் தேர்தல் பணியாற்றிய மார்க்சிஸ்ட் கட்சி தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய, மாநில தலைவர்களின் தேர்தல் பரப்புரை செய்திகளை மக்களுக்கு வெளியிட்டு உதவிய ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளில் பா.ஜ.க. கூட்டணி 370 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என அனைத்து ஊடகங்களும் தெரிவித்தன. ஆனால், அக்கட்சிக்குதனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, பா.ஜ.க.விற்கு செல்வாக்குள்ள உத்தரப் பிரதேசம், மராட்டியம், ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்களில் பெரும் சரிவை அக்கட்சி சந்தித்துள்ளது. கடந்த 10 ஆண்டு கால நரேந்திர மோடி அரசின் நாசகார ஆட்சிக்கு மக்கள் தக்க பாடம் புகட்டி யுள்ளது குறிப்பிடத்த க்கது. எதிர்காலத்தில் மதவெறி சக்திகளை எதிர்த்தும், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், ஜனநாயக உரிமைகளைப் பேணிக் காக்கவும், அனைத்து மத சார்பற்ற சக்திகளும் இணைந்து பணியாற்றும். அதில் மார்க்சிஸ்ட் கட்சி முழுமையான பங்கினை ஆற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் மூலம் பா.ஜ.க.விற்கு மக்கள் எச்சரிக்கை: அமைச்சர் துரைமுருகன் பேட்டி



வேலூர், ஜூன் 6

வேலூரில் அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

நாடாளுமன்ற தேர்தலில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் திறமையால் 40 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளோம். திராவிட கொள்கையை அடிப்படையாக கொண்ட கட்சிகளுக்கு தான் இனி தமிழகத்தில் எதிர்காலம் என்பதை இந்த தேர்தல் நிரூபித்திருக்கிறது. இந்த தருணத்தை மிகவும் மகிழ்ச்சியாக பார்க்கிறேன்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலை காட்டிலும் தேசிய அளவில் பா.ஜ.க.வின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது. அபரிமிதமான செல்வாக்குடன் தங்களை ஆட்டவும் முடியாது, அசைக்கவும் முடியாது என்று எண்ணிக் கொண்டிருந்த பா.ஜ.க.விற்கு அப்படி அல்ல;

மக்களாகிய நாங்கள் உங்களையும் கேள்வி கேட்க முடியும் என்று இந்த தேர்தல் மூலம் பா.ஜ.க.விற்கு மக்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். பா.ஜ.க.வின் வெற்றி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எனது மகன் கதிர்ஆனந்த் நாடாளுமன்றத்தில் பணியை தொய்வின்றி செய்யவேண்டும். வேலூர் நாடாளுமன்ற தொகுதி மக்களை அணுகி, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். என்றைக்கும் அவர்களின் தோழனாகவே தன்னை நினைத்து பணியாற்ற வேண்டும் என்று எனது விருப்பத்தை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பிரதமர் மோடியை சந்திரபாபு நாயுடு நிராகரிக்க வேண்டும்: செல்வப்பெருந்தகை அறிக்கை

சென்னை, ஜூன் 6

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மக்களவை தேர்தலில் பெற்ற வெற்றியை தமிழ்நாட்டு மக்களுக்கு சமர்ப்பிக்கிறோம். தமிழ்நாட்டில் இந்தியாகூட்டணிக்கு தலைமையேற்று நடத்திய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ்நாட்டின் குரலை நாடாளுமன்றத்தில் பேசவுள்ள எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துகள்.




இந்தியாவை கூறுபோட நினைத்த பாஜகவிற்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர். கூட்டணி ஆட்சியமைக்க மோடி நினைக்கிறார். ஆனால் அது ஒரு போதும் நடக்காது. இந்தியா கூட்டணி கட்சியினர் மக்களின் குரலாக இருப்பார்கள்.

ராமர் கோவில் அமைந்துள்ள தொகுதியில் பாஜக படுதோல்வி அடைந்துள்ளது. பிரதமர் மோடியை ராமரும் கைவிட்டார், விவேகானந்தரும் கைவிட்டார். ராமர் நிராகரித்த பாஜகவை சந்திரபாபு நாயுடு ஏன் நிராகரிக்கவில்லை?. மக்கள்நலனுக்காக மோடியை சந்திரபாபு நாயுடு நிராகரிக்க வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடி எழுதி கொடுப்பதை தேர்தல் ஆணையம் செய்து கொண்டிருக்கிறது. தேர்தல் பிரச்சாரத்தின் போது பாஜக தலைமையில் ஆட்சி அமையும் என்றார்; அதன் பிறகு தேசிய ஜனநாயக கூட்டணி தலைமையிலான ஆட்சி அமையும் என பிரதமர் மோடி மாற்றி கூறுகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# 'தமிழ்நாடு திராவிட பூமி; மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பு!' வைகோ

சென்னை, ஜூன் 6

பத்தாண்டு கால நரேந்திர மோடி ஆட்சிக்கு எதிராகத்தான் மக்கள் இந்த தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள் என்றும், மோடி பிரதமர் பதவியில் நீடிக்கின்ற தார்மீக உரிமையை இழந்திருக்கிறார் என்றும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"நடந்து முடிந்த 18வது மக்களவை தேர்தலில், இந்திய திருநாட்டு மக்கள் ஜனநாயகத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். பத்தாண்டு காலம் பாசிச அரசு நடத்திய பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று ஆணவமும் அதிகாரத் திமிரும் கொப்பளிக்க தேர்தல் பரப்புரைகளில் மதவெறி ஊட்டி எதேச்சதிகாரப் போக்குடன் நடந்து கொண்டவர்களுக்கு மக்கள் சக்தி என்றால் என்ன என்பதை இந்த தேர்தல் உணர்த்தி உள்ளது.



ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம் என்று ஒற்றை இந்துத்துவ தேசியவாதத்தை நிலைநிறுத்த முயன்றவர்களுக்கு 18வது மக்களவை தேர்தலில் சரியான அடி விழுந்திருக்கிறது. பா.ஜ.க.வின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக அமைந்த 'இந்தியா' கூட்டணி இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகத்தான வெற்றியை பெற்றிருக்கிறது.

பத்தாண்டு கால நரேந்திர மோடி ஆட்சிக்கு எதிராகத்தான் மக்கள் இந்த தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, மோடி பிரதமர் பதவியில் நீடிக்கின்ற தார்மீக உரிமையை இழந்திருக்கிறார். ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் இந்தியாவில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியை அகற்றுவதற்கு 'இந்தியா' கூட்டணி தலைவர்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் நல்லாட்சி நடத்துகின்ற மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைந்த 'இந்தியா' கூட்டணி, அவர் பிரகடனம் செய்தவாறு 40 தொகுதிகளிலும் வெற்றி முரசு கொட்டி தமிழ்நாடு திராவிட பூமி என்பதை நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது. இந்துத்துவ மதவெறி பாசிச சக்திகளுக்கு தமிழ்நாட்டில் இடம் இல்லை என நாடாளுமன்ற தேர்தல் மூலம் தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் தீர்ப்பளித்து இருக்கிறார்கள்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் வெற்றி பெற்றுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட திருச்சிராப்பள்ளி தொகுதியில் மூன்று லட்சத்து 13 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும் வகையில் உழைத்த தி.மு. கழகத்தின் ஆற்றல் மிக்க அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

முன்னோடிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், வாக்காளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.

# கருணாநிதி நினைவிடத்தில் வெற்றி சான்றிதழை வைத்து மரியாதை செலுத்திய கனிமொழி

சென்னை, ஜூன் 6

நட்சத்திர அந்தஸ்து பெற்ற தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் கனிமொழி எம்.பி., அ.தி.மு.க. சார்பில் சிவசாமி வேலுமணி, பா.ஜனதா கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் விஜயசீலன், நாம் தமிழர்சார்பில் ரொவினா ரூத் ஜேன் உள்பட 28 வேட்பாளர் போட்டியிட்டனர். இந்த தொகுதியில் தூத்துக்குடி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள் அடங்கி உள்ளன. மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவான வாக்குகள் நேற்று வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் எண்ணப்பட்டது. அனைத்து சுற்றுகள் முடிவில் கனிமொழி 5,40,729 ஓட்டுகள்பெற்று அபார வெற்றி பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக அ.தி.மு.க. வேட்பாளர் சிவசாமி வேலுமணி 1,47,991 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் 3,92,738 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கனிமொழி 2வது முறையாக வாகை சூடினார்.



வெற்றி பெற்ற கனிமொழிக்கு தேர்தல் அதிகாரியான கலெக்டர் லட்சுமிபதி சான்றிதழ் வழங்கினார். கனிமொழி எம்.பி.யை தவிர அ.தி.மு.க., த.மா.கா., நாம் தமிழர் கட்சி உள்பட 27 வேட்பாளர்கள் டெபாசிட் இழந்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் அபார வெற்றி பெற்றதையடுத்து சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் கருணாநிதி நினைவிடத்தில் கனிமொழி எம்.பி. வெற்றி பெற்றதற்கான சான்றிதழை வைத்தும், மலர்தூவியும் மரியாதை செலுத்தினார். அவருடன் அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன் மற்றும் தொண்டர்கள் உடனிருந்தனர்.

## என்றும் என் நினைவில் பாலு...மிஸ் யூ இளையராஜா உருக்கம்



மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் 74வது பிறந்தநாள் இன்று. கடந்த 2020 அன்று கொரோனா காலக்கட்டத்தில் எஸ்.பி.பி. மறைந்தது திரையுலகிற்கே பேரிழப்பாக அமைந்தது. எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் உற்ற நண்பரும் இசையமைப்பாளருமான இளையராஜா, எஸ்.பி.பியின் பிறந்தநாளில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

அவரது எக்ஸ் பக்கத்தில், 'என்றும் என் நினைவில் பாலு...மிஸ் யூ' என உருக்கமாகப் பகிர்ந்துள்ளார். திரையுலகில் இளையராஜா இசையமைப்பில் 'மன்றம் வந்த தென்றலுக்கு', 'சுந்தரி கண்ணால் ஒரு சேதி' உள்ளிட்ட ஏராளமான ஹிட் பாடல்களைப் பாடியிருக்கிறார்.

அவர் மறைவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தேம்பி அழுத இளையராஜா, அவரது ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்று எஸ்.பி.பி. மறைந்த சமயத்தில் திருவண்ணாமலையில் மோட்ச விளக்கு ஏற்றி நெகிழ வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பவன் கல்யாண் நேரம் தொடங்குகிறது... 'ஓஜி' படக்குழு வெளியிட்ட போஸ்டர்



நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திரா, ஒடிசா, அருணாசலபிரதேசம், சிக்கிம் ஆகிய 4 மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் அருணாசலபிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கு 2ம் தேதியே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்த நிலையில், நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஆந்திரா, ஒடிசா சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன.

ஆந்திராவில் உள்ள மொத்த சட்டப்பேரவை தொகுதிகளின் எண்ணிக்கை 175 ஆகும். இதில் 88 இடங்களை வெல்லும் கட்சி ஆட்சியை பிடிக்கும். இந்த தேர்தலில் முதல்மந்திரி ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி அனைத்து இடங்களிலும் தனித்து போட்டியிட்டது.பா.ஜ.க.தலைமையிலானதேசியஜனநாயககூட்டணியில் தெலுங்கு தேசம் கட்சி 144 இடங்களிலும், ஜனசேனா கட்சி 21 இடங்களிலும், பா.ஜ.க. 10 இடங்களிலும் போட்டியிட்டது.

ஜன சேனா கட்சி தலைவரும் நடிகருமான பவன் கல்யாண் இந்த சட்டமன்ற தேர்தலில் பிதாபுரம் தொகுதியில் போடியிட்டார். அந்த தொகுதியில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி சார்பில் வங்கா கீதா விஸ்வநாத் போட்டியிட்டார். தற்போதைய நிலவரப்படி, பவன் கல்யாண் 1,34,394 வாக்குகள் பெற்றுள்ளார். வங்கா கீதாவை விட 70,279 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார். கிட்டத்தட்ட பிதாபுரம் தொகுதியில் பவன் கல்யாண் வெற்றியை உறுதி செய்துள்ளார்.

இந்த நிலையில் இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் பவன் கல்யாண் நடிக்கும் தே கால் ஹிம் ஓஜி (They Call Him OG) படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டரில் நெருப்பு பற்றி எரியும் நாற்காலியில் பவன் கல்யாண் அமர்ந்திருப்பது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. இந்த போஸ்டர் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த படத்தில் இம்ரான் ஹாஷ்மி, பிரியங்கா அருள் மோகன், அர்ஜுன் தாஸ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

## 'பயமறியா பிரம்மை' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை வெளியிட்ட இயக்குனர் பா.ரஞ்சித்




புதுமுக நடிகர் ஜேடி கதையின் நாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'பயமறியா பிரம்மை'. அறிமுக இயக்குனர் ராகுல் கபாலி இயக்கத்தில் உருவாகி உள்ள இந்த படத்தில், குரு சோமசுந்தரம், ஜான் விஜய், ஹரிஷ் உத்தமன், வினோத் சாகர், விஸ்வந்த், சாய் பிரியங்கா ரூத், திவ்யா கணேஷ், ஹரீஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு கே இசையமைத்திருக்கிறார். அகில் பிரகாஷ் படத்தொகுப்பு செய்கிறார். இந்த நிலையில் இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த பர்ஸ்ட்லுக் போஸ்டரை இயக்குனரும், தயாரிப்பாளருமான பா.ரஞ்சித் தன்னுடைய சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டு, படக்குழுவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் கவனம் ஈர்த்து வருகிறது.

## ஜெயம் ரவி நடித்துள்ள 'காதலிக்க நேரமில்லை' படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியீடு




'வணக்கம் சென்னை' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் கிருத்திகா உதயநிதி. அவர் இயக்கத்தில் கடந்த 2022ம் ஆண்டு வெளியான 'பேப்பர் ராக்கெட்' வெப்சீரிஸ் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில் கிருத்திகா உதயநிதி தற்போது 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தை இயக்கியுள்ளார்.

இந்த படத்தில் ஜெயம் ரவி கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும் இந்த படத்தில் நித்யா மேனன், யோகி பாபு, லால், வினய், லட்சுமி ராமகிருஷ்ணன், பாடகர் மனோ, ஜான் கோகேன், வினோதினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ரெட்ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

காவேமிக் அரி ஒளிப்பதிவு செய்துள்ளார். லாரன்ஸ் கிஷோர் படத்தொகுப்பு செய்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகி கவனம் பெற்றது. தொடர்ந்து சில நாட்களுக்கு முன்பு இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது.

இந்த நிலையில் இந்த படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. ஜெயம் ரவி, நித்யா மேனன் இருவரும் இருக்கும் காட்சிகள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்த கிளிம்ப்ஸ் வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## திருமணமான நடிகைகளை தென்னிந்திய திரையுலகம் ஒதுக்குகிறது: காஜல் அகர்வால்



காஜல் அகர்வால் திருமணத்துக்கு பிறகும் படங்களில் நடித்து வருகிறார். தமிழில் கமல்ஹாசனுடன் இந்தியன் 3 படத்திலும் தெலுங்கில் சத்யபாமா படத்திலும் நடித்து இருக்கிறார்.

இந்த நிலையில் காஜல் அகர்வால் அளித்துள்ள பேட்டியில் ''இந்தி திரையுலகுக்கும் தென்னிந்திய பட உலகுக்கும் இடையே பாகுபாடு உள்ளது. இந்தியில் ஷர்மிளா தாகூர், ஹேமா மாலினி போன்றோர் திருமணத்துக்கு பிறகும் நடித்தனர். இப்போதும் இந்தியில் திருமணமான தீபிகா படுகோனே, ஆலியாபட் ஆகியோருக்கு கிடைக்கும் கதாபாத்திரங்கள் தென்னிந்திய திரையுலகில் திருமணமான நடிகைகளுக்கு கிடைப்பது இல்லை.

இந்த விஷயத்தில் நயன்தாரா விதிவிலக்காக இருக்கிறார். அவருடைய படங்கள் தேர்வு எனக்கு பிடித்துள்ளது. திருமணமான நடிகைகளை தென்னிந்திய திரையுலகில் ஓரம்கட்டுகின்றனர். இந்த நிலைமையை விரைவில் மாற்றுவோம். இந்த தலைமுறை நடிகைகள் திருமணமாகி குழந்தை பெற்ற பிறகும் நடிக்க வருகிறார்கள்.

ரசிகர்களின் பார்வையும் மாறி இருக்கிறது. நல்ல கதையம்சம் உள்ள படங்களை அவர்கள் ரசிக்கிறார்கள். எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் முதன்மை கதாபாத்திரங்களிலும் நடிக்க முடியும்''என்றார்.

## டி20 உலகக்கோப்பை; இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் யார்..? ராகுல் டிராவிட் பதில்




20 அணிகள் கலந்து கொண்டுள்ள டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி ரோகித் சர்மா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், சஞ்சு சாம்சன், ரிஷப் பண்ட், ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ஜஸ்ப்ரீத் பும்ரா உள்ளிட்ட சீனியர் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் நாளை அயர்லாந்தை எதிர்கொள்ள உள்ளது. இந்த போட்டி இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெறுகிறது. வங்காளதேசத்துக்கு எதிரான பயிற்சி போட்டியில் சஞ்சு சாம்சனை விட சிறப்பாக செயல்பட்ட ரிஷப் பண்ட் விக்கெட் கீப்பராக விளையாடுவார் என தகவல் வெளியாகி உள்ளது.

ரோகித் சர்மாவுடன் தொடக்க ஆட்டக்காரராக யார் களம் இறங்குவார் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்நிலையில், சமீபத்தில் பாகிஸ்தானை தோற்கடித்த அயர்லாந்து அணியை குறைத்து மதிப்பிடவில்லை என்றும், தொடக்க ஆட்டக்காரர்களை சூழ்நிலையை பார்த்து விட்டு தேர்வு செய்ய உள்ளதாகவும் இந்திய அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக எப்படி தயாராவோமோ அதே போல இந்த போட்டிக்கும் நாங்கள் தயாராகிறோம். எங்களுடைய பயிற்சிகளில் எந்த குறைவும் கிடையாது. ஏனெனில் சமீபத்தில் பாகிஸ்தான் அணியை அயர்லாந்து வீழ்த்தியதை நாங்கள் அறிவோம். அவர்கள் டி20 கிரிக்கெட்டை அதிகமாக விளையாடுகிறார்கள் என்பதும் எங்களுக்கு தெரியும்.

பொதுவாக டி20 கிரிக்கெட்டில் நீங்கள் எந்த அணியையும் குறைவாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எனவே நாங்கள் அவர்களை குறைத்து மதிப்பிடவில்லை. 3 வெவ்வேறு அணியை நாங்கள் தேர்வு செய்துள்ளோம். எனவே போட்டி நாளன்று எந்த மாதிரியான சூழ்நிலை இருக்கிறதோ அதற்கு தகுந்தார் போல் எங்களுடைய தொடக்க ஆட்டக்காரர்களை தேர்ந்தெடுப்போம்.

அதற்கு தேவையான வீரர்கள் எங்களிடம் இருக்கின்றனர். எனவே எங்களுடைய அணியை இப்போது நாங்கள் வெளியிட விரும்பவில்லை. ஆனால் எங்களிடம் நல்ல தேர்வுகள் இருக்கிறது. குறிப்பாக ரோகித் சர்மா மற்றும் ஜெய்ஸ்வால் ஆகியோர் துவக்க வீரர்களாக உள்ளனர். விராட் கோலி ஐ.பி.எல் தொடரில் துவக்க வீரராக விளையாடினார். இவ்வாறு அவர் கூறினார்.

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: ஸ்வெரேவ் கால்இறுதிக்கு முன்னேற்றம்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பாரீசில் களிமண் தரை மைதானங்களில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் ஒலிம்பிக் சாம்பியனான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜெர்மனி), ஹோல்கர் ரூன் உடன் (டென்மார்க்) மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஸ்வெரேவ் 46, 61, 57, 76 (72), 62 என்ற செட் கணக்கில் ரூனை வீழ்த்தி கால்இறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெற உள்ள கால்இறுதி போட்டியில் ஸ்வெரேவ், 11ம் நிலை வீரர் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதுகிறார்.

## பஜ்ரங் பூனியா மீதான இடைநீக்கம் ரத்து




ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவரான இந்திய முன்னணி மல்யுத்த வீரர் பஜ்ரங் பூனியா கடந்த மார்ச் 10ந்தேதி சோனிபட்டில் நடந்த இந்திய அணித் தேர்வுக்கான தகுதி போட்டியில் தோல்வி அடைந்தார். அப்போது அவரிடம் ஊக்கமருந்து சோதனைக்காக சிறுநீர் மாதிரியை தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை அதிகாரிகள் கேட்ட போது அதை வழங்க மறுத்து விட்டார். இதையடுத்து ஊக்கமருந்து சோதனைக்கு ஒத்துழைக்கமறுத்தகாரணத்துக்காகஅவரைஊக்கமருந்து தடுப்பு முகமை இடைநீக்கம் செய்தது. இதை எதிர்த்து அவர் ஊக்கமருந்து தடுப்பு முகமையின் ஒழுங்கு நடவடிக்கை கமிட்டியிடம் முறையிட்டார்.


இது குறித்து விசாரித்த ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி, அவர் மீதான இடைநீக்க நடவடிக்கையை நேற்று ரத்து செய்தது. அவர் மீது குற்றச்சாட்டு இன்னும் பதிவு செய்யப்படவில்லை. ஊக்கமருந்து தடுப்பு முகமை அவருக்கு குற்றச்சாட்டுக்கான நோட்டீஸ் அனுப்ப முடிவு செய்தால், அதன் பிறகு இது குறித்து இறுதி விசாரணை நடத்தப்படும் என்று கமிட்டி அறிவித்துள்ளது.



**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்**

**விளக்கம்:**
**பொறாமை பொருந்திய நெஞ்சத்தானுடைய ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுடைய கேடும் ஆராயத் தக்கவை**

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்; இகா ஸ்வியாடெக், கோகோ காப் அரையிறுதிக்கு முன்னேற்றம்



பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெற்றன.

இதில் ஒரு காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் கோகோ காப், துனிசியாவின் ஒன்ஸ் ஜபீர் உடன் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 46 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த கோகோ காப் ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 62, 63 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார்.

இதன் மூலம் கோகோ காப் 46, 62, 63 என்ற புள்ளிக்கணக்கில் துனிசியாவின் ஒன்ஸ் ஜபீரை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெற்ற மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் போலந்தின் இகா ஸ்வியாடெக், செக் குடியரசின் மார்கெட்டா வாண்ட்ரோசோவா உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட இகா ஸ்வியாடெக் 60, 62 என்ற நேர் செட் கணக்கில் மார்கெட்டா வாண்ட்ரோசோவாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை மறுநாள் நடைபெறும் ஒரு அரையிறுதி ஆட்டத்தில் இகா ஸ்வியாடெக் கோகோ காப் மோத உள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.